1994 மார்ச் 28]

பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன் திருப்பூரில் இருக்கின்ற கால்நடை மருத்துவமனையைக் கேட்டார். அவினாசியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஐ.டி.ஐ. கேட்கிறார்கள். ஆகவே, திருப்பூரிலே குடியிருப்பதால் தொல்லை. அவரவர்கள் தொகுதியிலே சென்று அவர்கள் குடியிருக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்தால் சிரமங்கள் குறைவாக இருக்கும். (மேசையை தட்டும் ஒலி) நான் எந்த நேரத்திலும் விழிப்போடு இருந்துகொண்டிருக்க வேண்டிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அந்தத் தொகுதியிலே அவர்கள் பணியாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தங்கள் சொந்தத்திற்கேற்ப எங்கேயும் தங்கிக்கொள்ளலாம். சென்னையிலேயே பல உறுப்பினர்கள் தங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தொகுதிக்குப் போனால் கூட நல்லதுதான். (சிரிப்பு).

வினா எண் 117, திரு. சோ. பாலகிருஷ்ணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

117-

முதுகுளத்தூரில் அபிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்.

* *17473*—திரு. சோ. பாலகிருஷ்ணன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் மற்றும் கமுதி ஊராட்சி ஒன்றியங்களை மூன்றாகப் பிரித்து, அபிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது தொடர்பான நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதி ஒன்றியம் என்பது மிகப் பெரிய ஒன்றியம். 60

பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் சிதம்பரனார் மாவட்டமும், மற்றொரு பக்கத்தில் காமராஜர் மாவட்டமும் இன்னொரு பக்கத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டமுமாகப் பரந்து விரிந்து கிடக்கின்ற அந்த ஒன்றியத்தை பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ** ஆகவே, தயவு செய்து...(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது மாதிரி வரும். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : எங்களுடைய தாலுக்காவிலிருந்து அமைச்சராக வந்திருக்கின்ற மாண்புமிகு சத்தியமூர்த்தி அவருக்காகவாவது இந்தக் கமுதி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்துக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஏதோ ஒரு தனிப்பட்டவருக்காகவோ, தனிப்பட்ட அமைச்சர் தொகுதிக்காகவோ செய்வதல்ல. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் சத்தியமூர்த்தி அவர்கள் தெளிவாக பலமுறை அரசிடம் எடுத்துரைத்திருக்கிறார்கள். அது சம்பந்தமான கோப்புகள் ஆய்வில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவருடைய முயற்சிக்குப் பிறகுதான், ஊராட்சி மன்றத்திலேயிருந்து தீர்மானங்கள் எல்லாம் பெறப்பட்ட பிறகு ஆய்விலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏதோ அவருடைய முயற்சியின்மையால் அல்ல. இன்றைக்கு ஒரு நிலைமைக்கு இந்தப் பிரிவினை வந்திருக்கிறதென்றால், அதற்கு அமைச்சர் சத்தியமூர்த்தி அவர்கள்தான் காரணம். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமை மத்திய அரசால் போடப்பட்டிருக்கின்ற பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பஞ்சாயத்து ராஜ் சட்டத் திருத்தத்தின்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958 திருத்தியமைக்கப்பட இருக்கிறது. அப்படி அமைக்கின்றபோது, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் எல்லாம், அதிலே இருக்கின்ற அமைப்புகளும் மாற்றியமைக்கப்பட இருக்கின்றன. அப்படி இந்த சட்டத் திருத்தத்தின் காரணமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாக அமைப்புகளும் புதிதாக அமைய இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் போன்றவற்றை அமைத்தல், பிரித்தல், தரம் உயர்த்துதல் போன்ற கருத்துருக்களை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 மார்ச் 28]

திருத்தியமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்று அரசு உத்தேசித்துள்ளது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வந்திருக்கின்ற இந்த அரசியல் சட்டத் திருத்தத்திற்கு நம்முடைய அவையிலே சட்டத்திருத்தம் கொண்டுவர இருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் கேள்விப்பட்ட வரையில் ஏப்ரல் 23 ஆம் தேதிக்குள்ளாக இந்தச் சட்டத்திருத்தம் வந்தாகவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குரிய அறிகுறியே இந்தச் சட்டமன்றத்தில் இதுவரையில் தெரியவில்லை. ஆகவே, அது வருகிறதோ வரவில்லையோ, உடனடியாக எங்களுடைய கமுதி ஒன்றியத்தையும், முதுகுளத்தூர் ஒன்றியத்தையும் சேர்த்து 3 ஒன்றியங்களாகப் பிரித்துத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். நான் மாண்புமிகு சத்தியமூர்த்தி அவர்களைத் தவறாகச் சொல்லவில்லை. சத்தியமூர்த்தி அவர்களைப் பொறுத்தவரையில் முதன்முதலாக எங்களுடைய பகுதியிலே இருந்து ஒருவர் அமைச்சராக வந்திருக்கிறார்கள். வந்தவுடன் அவருடைய ஒன்றியத்தைப் பிரித்துவிட்டார்கள் என்கிற எண்ணம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அவரையும் இதிலே இழுத்துப் பேசினேன். ** இருக்கலாம். ஏனென்றால் அவர் மூலமாகவாவது இந்த ஒன்றியம் மூன்றாகப் பிரிக்கப்படட்டுமே என்பதற்காகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்து இந்த ஒன்றியத்தைப் பிரிக்கிற பணியினை நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருந்த பதில் கமுதி மற்றும் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் அதிகமாக வந்து இருக்கின்றன. நான் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற 73, 74-வது திருத்தச் சட்டத்தின்படி-அதாவது இந்திய அரசியலமைப்புச் சட்டம் - அதிலே பஞ்சாயத்து, பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா தேர்தலுக்கு என்று தனியாக எலக்ஷன் கமிஷன், தேர்தல் ஆணையம் அமைய இருக்கிறது. அதாவது அந்தச் சட்டத்திருத்தத்தின்படி அமைய இருக்கிறது. அப்படி இந்தப் பஞ்சாயத்துக்கள், ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும், பிரிக்கப்பட வேண்டும், தரத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னால் அந்தத் தேர்தல் ஆணையம்தான் அதைச் செய்யவேண்டும். அப்படி அந்தத் திருத்தத்தை மேற்கொள்கிறபோது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1994 மார்ச் 28

தற்போது இருக்கிற வரைமுறைப்படி பல்வேறு புதிய நிர்வாக அமைப்புகளை மேற்கொள்ள இருக்கிறோம் இந்தச் சட்டத்திருத்தத்தின்படி. ஆகவே தற்போது அதைச் செய்ய இயலாது. சட்டத்திருத்தம் காரணமாகத்தான் இது வருகிறது. அடுத்தபடியாக இந்தச் சட்டத்திருத்தம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் எப்போது வைக்கப்படும், ஏப்ரல் 23--க்குள் வைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், அறிகுறி இல்லை என்று சொன்னார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அரசு ஏற்கெனவே இது சம்பந்தமாக 'டாஸ்க்ஃபோர்ஸ்' ஒன்று – அதாவது ஒரு கமிட்டியை நியமித்து இருக்கிறது. அந்தக் கமிட்டி இதை எல்லாம் ஆராய்ந்து இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, குறித்த காலத்திலே அந்தச் சட்டத்திருத்தத்தை அரசு கொண்டுவர இருக்கிறது. இது சம்பந்தமாக பலமுறை மாண்புமிகு இதயதெய்வம், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலேயே அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 118, திரு. ஆ. பாலையா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

118-

தலக்குளம் ஊராட்சியைத் திங்கள்நகர் பேரூராட்சியுடன் இணைத்தல்.

* *22611*—**திரு. ஆ. பாலையா :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியில் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இணைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கு இயலாது என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தலக்குளம் ஊராட்சி ஒரு பின்தங்கிய ஊராட்சி மட்டுமல்ல. ஒரு சின்னஞ்சிறிய ஊராட்சி. அந்த ஊராட்சியால்